கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு
2016 / 2017 (யூலை/ஆகஸ்ட் - 2019)

# HY 1212 Humanity and Medieval Civilization
# HY 1212 மத்தியகால நாகரிகங்களும் மனிதப் பண்பாட்டியலும்

நேரம்: 02 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

## பகுதி I

01. "உலகில் தோன்றிய புராதன நாகரிங்களுள் சரஸெனிக் (Saracinic), பைசாந்திய (Byzantine) நாகரிகங்கள் முதன்மையானவை" இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களை நுணுகி ஆராய்க.
    அ) இரு நாகரிகங்களுக்கிடையிலான வேறுபாடுகள் (10 புள்ளிகள்)
    ஆ) கீழைத்தேய நாகரிகத்தின் பண்பாட்டம்சங்கள் (10 புள்ளிகள்)

02. மேல்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் கரோலிஞ்சியப் பேரரசின் (Carolingian Empire) வளர்ச்சியில் சார்லிமென் (Charlemagne) பெற்றுள்ள முக்கியத்துவத்தை விளக்குக.
    அ) படைத்துறை நிர்வாகம் (10 புள்ளிகள்)
    ஆ) சமூக பொருளாதார அம்சங்கள் (10 புள்ளிகள்)

03. "தமது அறிவியற் சாதனைகளால் தென்னமெரிக்காவில் சிறந்ததொரு நாகரிகத்தை உருவாக்கியவர்கள் மாயன்களாவர்" இந்நாகரிகம் தொடர்பாக மேல்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
    அ) சடங்கு முறைகள் (10 புள்ளிகள்)
    ஆ) அறிவியல் கண்டுபிடிப்புகள் (10 புள்ளிகள்)

## பகுதி II

04. கிறிஸ்தவ மடாலயங்களின் தோற்றம், வளர்ச்சி, அவற்றின் சமூகப் பங்களிப்புத் தொடர்பில் ஒரு கட்டுரை எழுதுக. (30 புள்ளிகள்)

05. மத்திய கால ஐரோப்பாவில் தோன்றிய பல்கலைக்கழகங்கள், அவற்றின் கல்விப் பணிக என்பவற்றின் முக்கியத்துவம் பற்றி விபரிக்குக. (30 புள்ளிகஎ

06. சீன நாகரிகம் தொடர்பில் மேல்வரும் தலைப்புக்களிலிருந்து ஏதாவது மூன்றைத் தெரிவு செய்து வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

அ) சௌ வம்சம்
ஆ) சீனப் பெருஞ்சுவர்
இ) ஹீவாங்டி மன்னன்
ஈ) கான் வம்சம்
உ) சீனப் படையெடுப்புக்கள்
ஊ) சீனாவின் துயரம் - குவாங்கோ நதி (10 x 3 = 30 புள்ளிகள்)